# சிந்துவெளி நாகரிகம்

## 6th Std – Term 1 – வரலாறு - பாடம் 2

1] ஹரப்பா நாகரிகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

**நகர நாகரிகம்.**

2] இந்திய நாகரிகத்தின் தொடக்கமாக கருதப்படும் நாகரிகம் எது?

**சிந்துவெளி நாகரிகம்**

3] ஆங்கிலேயர்கள் சுட்ட செங்கற்களையும், கட்டிட இடி பாடுகளையும் கண்டறிந்த ஆண்டு ?

**1856**

4] ஆங்கிலேயர்கள் சுட்ட செங்கற்களையும், கட்டிட இடி பாடுகளையும் கண்டறிந்த இடம் ?

**இருப்புப்பாதை அமைக்கும் பணியின்போது பஞ்சாப் மாநிலத்தில் சிந்து நதியின் கிளை நதியான ராவி நதிக்கரையில் அமைந்த மணல் மேட்டில் ஆங்கிலேயர்கள் சுட்ட செங்கற்களையும், கட்டிட இடி பாடுகளையும் கண்டறிந்தனர்.**

5] தொன்மை இந்தியாவின் முதுபெரும் நகரம் எது?

**ஹரப்பா**

6] தொன்மை இந்தியாவின் முதுபெரும் நகரம் கண்டறியப்பட்ட ஆண்டு?

**1921 ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சியில்**

7] ஹரப்பா என்னும் சொல் எந்த மொழியைச் சார்ந்தது ?

**சிந்தி**

8] ஹரப்பா என்னும் சொல்லின் பொருள் என்ன ?

**புதையுண்ட நகரம்**

9] ஹரப்பா நாகரிகம் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது ?

**சுமார் 4700 ஆண்டுகள்**

10] ஹரப்பாவை போல் நகர இடிபாடுகள் கண்டறியப்பட்ட பகுதிகள் யாவை ?

**மொகஞ்சதாரோ, சான்குதாரோ, கலிபங்கன் மற்றும் லோத்தல்**

11] பெருங்குளம் அமைந்துள்ள இடம்?

**மொஹன்சதாரோ**

12] லோத்தல் அமைந்துள்ள இடம் எது?

**குஜராத்**

13] மொகஞ்சதாரோ என்னும் சிந்திமொழி சொல்லின் பொருள்?

**இடுகாட்டு மேடு**

14] சிந்து வெளி நாகரிகத்தில் நடைமுறையில் இருந்த தொழில் நுட்பங்கள் யாவை?

பயன்பாட்டு அறிவியல்

கட்டடத் தொழில், நிலம் தேறுதல், மனை அளவீடு, கால்கோளுதல், தரமான கட்டுமானப் பொருள்களைத் தேர்ந்தெடுத்தல், வடிவக் கணித அமைப்புப் பற்றி அறிதல் முதலிய பயன்பாட்டு அறிவியல் (Applied Science) தொழில் நுட்பங்கள் நடைமுறையில் இருந்தன.

15] எவற்றை பயன்படுத்தி சட்டி, பானைகள் செய்யப்பட்டன?

**சக்கரம்**

16] சிந்து வெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் யாவை?

**செம்பு, வெண்கலம், தங்கம், வெள்ளி**

**எடைக்கற்களாக - ஒரு வகையான திண்மையான கற்கள்**

**பயன்படுத்தாத உலோகம் - இரும்பு**

17] முக்கிய தொழில் - விவசாயம்

பயிர்கள் - கோதுமை, பார்லி

உடை - பருத்தி, கம்பளியால் ஆன உடைகள்

சிந்து வெளி மக்கள் பயன்படுத்திய எழுத்து முறை - சித்திர எழுத்துக்கள்

18] சிந்துவெளி மக்கள் எந்த பாண்டம் செய்வதில் திறமை மிக்கவர்களாக இருந்தனர்?

**டெர்ராகோட்டா (TERRACOTTA) எனப்படும் சுடுமண்பாண்டம்**

19] சிந்துவெளி மக்களின் சிற்பங்கள் யாவை?

சிற்பம்

1. மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ள வெண்கலத்தால் ஆன நாட்டிய மங்கையின் உருவச்சிலை.
2. தாடியுடன் காட்சிதரும் ஒருவரின் சுண்ணாம்புக்கல் சிலை முதலியன, அக்கால மக்களின் சிற்ப வேலைத் திறனுக்குச் சிறந்த சான்றுகளாகும்.

20] சிந்துவெளி கடவுளாக எதனை வணங்கினார்கள்?

பசுபதி என்ற சிவனையும், பெண் கடவுளையும், லிங்கம், சூலம், மரம் முதலியவற்றையும் வணங்கினர்.

# பண்டைத் தமிழகம்

## 6th Std – Term 1 – வரலாறு - பாடம் 3

1] எந்தப் பகுதி உலகிலேயே மிக மிக தொன்மையானது?

விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பகுதி.

2] திருப்பதி மலைக்குத் தெற்கில் வாழும் மக்கள் பேசும் மொழி என்ன?

தமிழ் மொழி

3] ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும் பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?

சென்னை மாகாணம்

4] தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்னும் பெயர் சூட்டப்பட்ட ஆண்டு?

1967 ஆம் ஆண்டு.

5] தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்னும் பெயர் சூடியவர் யார்?

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களால் "தமிழ்நாடு" என பெயர் சூட்டப்பட்டது.

6] தமிழ் சங்கங்களும் அதன் தலை நகரங்களும் யாவை?

| சங்கம் | தலைநகர் |
|---|---|
| முதற்சங்கம் | தென்மதுரை |
| இடைச்சங்கம் | கபாடபுரம் |
| கடைச்சங்கம் | மதுரை மூதூர் |

7] பாண்டிய மன்னர் தலைமையில் புலவர்கள் கூடி தமிழ் ஆய்வு நடத்திய இடம் எது ? அது எவ்வாறு வழங்கப்படுகிறது?

மதுரை மூதூர். இதுவே “கூடல்” என்னும் பெயர் பெற காரணம் ஆயிற்று.

8] வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் என்பது எது?

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்:

வரலாற்றுக் காலத்திற்கு முன்னர், குமரி முனைக்குத் தெற்கே உள்ள இந்துமாக்கடல் பகுதி, ஒரு பெருநிலப் பரப்பாக இருந்தது. அதைக் குமரிக் கண்டம் என்பர் புலவர். தென்னாட்டைப் போன்று எட்டு, பத்து மடங்கு பெரிய அந்நிலப் பரப்பில், பஃறுளியாறு ஓடியது, பன்மலை அடுக்கம் நீண்டிருந்தது. மழைவளம் பெருகி, பெருங்காடுகள் வளர்ந்து, மக்களின் நாகரிகமும் சிறந்து நல்லதோர் அரசும் நடைபெற்றிருக்க வேண்டும் என்பர். அதுவே பண்டை அரசான பாண்டியர் அரசு ஆக இருத்தல் கூடும்.

9] லெமூர் என்பது எதனை குறிக்கிறது?

**லெமூர் என்பது குமரிக்கண்டத்தின் முன்பாக தோன்றிய, குமரிக்கண்டத்தினை உள்ளடக்கிய கண்டத்தில் வாழ்ந்த ஒரு குரங்கினைத்தை குறிக்கும். பின்னர் அக்கண்டமே "லெமுரியா" என பெயர் பெற்றது.**

10] சங்க காலம் என்பது எந்த ஆண்டுகளை குறிக்கிறது?

தமிழ்நாட்டைக் குறித்து அறியக் கூடிய வரலாற்றுக் காலம் சங்க காலத்தில் தொடங்குகிறது. சங்க காலம் என்பது கடைச்சங்கத்தில் புலவர்கள் அவ்வப்போது கூடித் தமிழ் ஆய்வு செய்த காலமாகும். அது தி.மு. ஆண்டு 200 முதல் தி.பி. ஆண்டு 200 வரை 400 ஆண்டுக் காலமாகும். அது தி.மு. 300 முதல் தி.பி.300 வரை என்று கொள்வோரும் உண்டு.

11] கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தோன்றிய இலக்கண நூல்?

தொல்காப்பியம்

12] அனைத்து சமுதாயத்தவரும் வியந்து போற்றும் அளவுக்கு, சங்க காலத்தில் தோன்றிய நூல் எது?

திருக்குறள்

13] கடலில் செல்லும் கலங்களைச் சுட்டும் பெயர்கள் யாவை?

நாவாய், கலம் , கப்பல், தோணி, ஓடம், படகு, தெப்பம் மற்றும் கட்டு மரம்.

14] தமிழ்நாடு வணிகம் செய்து வந்த பகுதிகள் எவை?

மேற்கிலும், கிழக்கிலுமிருந்த எகிப்து, யவனம், ரோம் மற்றும் சீனம்.

15] நகர நாகரிகத்திற்கு உதாரணங்கள் எவை?

மொகன்சதாரோ , ஹரப்பா

16] சங்க காலத்தில் புலவர்கள் நிலத்தை எவ்வாறு பிரித்தனர்?

| | |
|---|---|
| குறிஞ்சி | மலைகளும் அது சார்ந்த நிலமும் |
| முல்லை | காடுகளும் அது சார்ந்த நிலமும் |
| மருதம் | நீர் வளத்துடன் வயல் சூழ்ந்த பகுதி |
| நெய்தல் | கடலும் கடற்கரைப்பகுதியும் |
| பாலை | கடும் வறட்சிக்கு உள்ளாகி திரிந்த நிலம் |

17] சங்க காலத்தில் உயர்ந்து விளங்கிய தொழில் எது ?

உலகோர்க்கு உணவளிக்கும் உழவுத் தொழில்.

18] சேர மரபில் வந்தவர்களுள் புகழோங்கியவர்கள் யாவர்?

- இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்
- சிலம்பு புகழ் சேரன் செங்குட்டுவன்

### 19] மூவேந்தர்களின் தலைநகர், துறைமுகம், சின்னம்:

| | சேரர் | சோழர் | பாண்டியர் |
|---|---|---|---|
| தலைநகர் | வஞ்சி (கரூர்) | உறையூர் | மதுரை |
| துறைமுகம் | தோண்டி மற்றும் முசிறி | காவிரிப்பூம்பட்டினம் | கொற்கை (தூத்துக்குடி) |
| சின்னம் | விற்கொடி | புலிக்கொடி | மீன்கொடி |

### 20] பாண்டிய மன்னர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் யாவர்?

பாண்டிய மரபில் வந்த மன்னர்களுள் பீடும் பெருமையும் வாய்ந்தவர்கள் சிலர். அவர்களுள் பாண்டியன் முடத்திருமாறனும், தன்மீது போர் தொடுத்த ஏழு குறுநில மன்னர்களை ஒருசேர வென்ற தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற பெருமைக் குரியவனும், யானோ அரசன்? யானே கள்வன்! என்று கூறி வளைந்த தன் செங்கோலை நிமிர்த்துமாறு உயிர் நீத்தவனுமான பாண்டியன் நெடுஞ் செழியனும் குறிப்பிடத் தக்கவர்கள்.

குறுநில மன்னர்களாக விளங்கிய கடையெழுவள்ளல்களான பாரி, ஓரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன் ஆகியோர் புகழ்பெற்றவர்கள் ஆவர்.

### 21] சங்க கால வழிபாட்டு முறைகள் யாவை?

திருக்கோவில்கள் கட்டும் முறை வளராத அக்காலத்தில், சங்ககால மக்கள் போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நடுகல்லையும் தமது முன்னோர்களையுமே வழிபட்டு வந்தனர்.

**22] சோழ மன்னர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் யாவர்?**

சோழ மரபில் வந்தவர்களுள் – கரிகாற் சோழன், கிள்ளிவளவன் ஆகியோர் புகழ்மிக்கவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சோழமன்னன் கரிகாலன். அவன் தனது ஆட்சிக் காலத்தில், ஈழத்தை வென்று, அந்நாட்டவரைக் கைதிகளாகக் கொண்டு வந்து காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டினார். அது இன்றும் பயன்பாட்டில் உள்ளது. எனவே அவர் "கரிகால் பெருவளத்தான்" என்று போற்றப்படுகிறார்.

இடைக்காலத்தில் வாழ்ந்த இராசராசசோழன், இராசேந்திரசோழன் ஆகியோரும் பெரும்புகழ் பெற்றவர் ஆவர். அவர்கள் வடபுலத்தை மட்டுமன்றி ஜாவகம், கடாரம் முதலான கீழ்த்திசை நாடுகளையும் வென்றதாக வரலாறு கூறுகிறது.

**23] சங்க கால விழாக்கள் யாவை?**

அறுவடை விழா, பொங்கல் விழா, இளவேனில் பருவவிழா போன்ற விழாக்களை மக்கள் கொண்டாடினர். தலைநகர்களில் இந்திர விழாவும் கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் புராணங்களின் வழியாகப் பரவிய பல பண்டிகைகளை அக்கால மக்கள் அறிந்திருக்கவில்லை.